# மட்டக்களப்பு மாவட்ட நாட்டார் பாடல்கள் - ஒரு நோக்கு

கலாநிதி த.மேகராசா

கலை கலாசார பீடம்

மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றை எடுத்துக்கூறுவனவாக அமைந்த இலக்கியங்களே நாட்டார் இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் நாட்டுப்புற இலக்கியங்கள், வாய்மொழி இலக்கியங்கள், ஏட்டில் எழுதா இலக்கியங்கள், மக்கள் இலக்கியங்கள் என்று பலவாறு அழைக்கப்படுகின்றன. நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் என்பன இதன் பிரிவுகளாகும். மக்களின் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்து அம்மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்க்கை நிகழ்வுகளை, மன உணர்வுகளை எடுத்துக் கூறுவன நாட்டார் பாடல்களாகும். இப்பாடல் வகையினை நாடோடிப்பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள், ஏட்டில் எழுதாக் கவிதை, காற்றிலே மிதந்த கவிதை, மலையருவி, மக்கள் பாடல்கள் என்று பலவாறு குறிப்பிடுவர். வாய்மொழியாகப் பரவலடைதல், அதன் காரணமாக பிரதேசத்திற்குப் பிரதேசம் திரிபடைந்து வழங்குதல், பாடியவர் யாரென்று அறிய முடியாமை, சொற்கள், சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறுதல், அவ்வாறு திரும்பத்திரும்ப இடம்பெறுவதன் மூலம் கருத்து அழுத்தம் பெறுவதுடன் பாடலும் சுவை மிகுதல், எளிமையாக இருத்தல் முதலான பல பண்புகள் பொருந்தியனவாக நாட்டார் பாடல்கள் உள்ளன.

காற்றுக்கு வரையறையில்லை: அது எங்கும் செல்லும். நாட்டார் பாடலும் (காற்றில் கலந்த கவிதையும்) வாய்மொழியாக எல்லையற்று பரவலடையும் அதன் இயல்பிற்கு ஏற்ப குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்பட்டு நிற்காது பலவேறு பிரதேசங்களில், மாவட்டங்களில் மட்டுமன்றி பண்பாட்டு ஒருமைத்தன்மை பொருந்திய நாடுகளில் கூட பரவலடைந்து மாற்றங்களுடன் காணப்படும் இயல்புடையது. அதன் காரணமாக நீண்ட காலமாக வழங்கிவருகின்ற நாட்டார் பாடல்களை குறிப்பிட்டதொரு மாவட்டத்திற்குரியதாக வரையறுத்து நோக்குவது சவால்மிக்கதாகும். ஆனாலும் கூட மட்டக்களப்பு ஊர்ப் பெயர்களுடன் பொருந்தி நிற்றல், பிரதேச மொழி வழக்குகளை உள்வாங்கியிருத்தல், சமூகக் குழுக்களை அடையாளப்படுத்தியிருத்தல் முதலானவற்றின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட நாட்டார் பாடல்கள் இனங்காணப்பட்டு அப்பாடல்கள் அவற்றின் பொருள் அடிப்படையில் இங்கு நோக்கப்படுகின்றன.

குழந்தைகளின் அழுகையை நிறுத்தவும், அக்குழந்தைகளை தூங்க வைக்கவும் தாலாட்டுப்பாடல்கள் பாடப்படுகின்றன. தால் என்பது நாக்கைக் குறிக்கின்றது. நாக்கை அசைத்துப் பாடும் பாடல்கள் தாலாட்டுப்பாடல்களாகும். குழந்தையின் தாய், குழந்தையின் அம்மம்மா, அப்பம்மா, குழந்தையின் தாயின் சகோதரிகள் முதலானோர் குழந்தை அழுவதற்குக் காரணமானவர்கள் யார் யாரென்று குறிப்பிட்டும் குழந்தையின் அழகை வர்ணித்தும் குழந்தை விரும்பும் விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கூறியும் பாடுவதாக இப்பாடல்கள் அமைந்திருக்கும். அத்துடன் தாயொருத்தி குழந்தையில்லாது தான் பட்ட துன்பங்களையும் குழந்தை வரம் வேண்டி தான் செய்த பிரார்த்தனைகளையும் நேர்த்திக்கடன்களையும் குறிப்பிட்டு பாடிய பாடல்களும் உள்ளன. நாட்டார் பாடல்கள் மருவிக்கொண்டுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்ட கிராமப்புறங்களில் தாலாட்டுப்பாடல்களைப் பாடுவோரின் குரல்கள் இன்றும் ஒலிப்பதை அவதானிக்க முடிகின்றது. இம்மாவட்டத்தின் விவசாய சூழலும் அதனை

அடிப்படையாகக் கொண்ட கிராமியப் பண்பாடும் இன்றும் தொடர்வது இதற்கான அடிப்படைக் காரணமாகும்.பொதுவாகத் தாலாட்டுப்பாடல்கள் பின்வருமாறே ஆரம்பமாவதை அவதானிக்கலாம்.

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ ஆராரோ

குழந்தையில்லாமல் தாயொருத்தி பட்ட துயரையும் கதிர்காமக்கந்தன், மாமாங்கச் சாமி ஆகியோர் அருளினால் குழந்தை பிறந்தமையினையும் அக்குழந்தை மனப்பாரத்தை நீக்கியமையினையும் மட்டக்களப்பில் வழங்கும் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

தங்கமகனே – அழகுகண்டார்
தனிமலடு தீர்த்தவனே

பிள்ளை வேணுமெண்டு
நாங்க கதிர்காமம் போகையிலை
கதிர்காமக் கந்தன்
பிள்ளைக்கலி தீர்த்தாரையா

மைந்தன் இல்லையென்று
மாமாங்கம் போகையிலை
மாமாங்கச் சாமி எங்கள்
மனக்கவலை தீர்த்தாரையா

இலைதீய்ந்து கொடி கருகி
இல்லையென்று போகையிலை
மாரிபோல் வந்து
மனக்கவலை தீர்த்தாயே

இப்பாடல் தமிழ்ச் சமூகத்தை, அச்சமூகத்தினரின் வழிபாட்டுத்தலங்களை அடையாளப்படுத்தி நிற்பதையும் காணலாம்.

விளையாட்டு மனித வாழ்வில் முக்கியமான ஒன்றாகும். சிறுவர் சிறுமியர் ஒன்று சேர்ந்து தாம் விரும்பிய விளையாட்டை விளையாடி மகிழ்வது உலகெங்கிலும் நடைபெறுகின்ற நிகழ்வாகும். இவ்விளையாட்டுக்களை விளையாடுகின்றபோது பாடல்களைப் பாடுவதும் சிலவேளைகளில் பாடல்களே விளையாட்டாக அமைவதும் உண்டு. கிட்டிப்புள்ளு விளையாட்டு, ஊஞ்சல் விளையாட்டு, சுரக்காய் இழுக்கும் விளையாட்டு, கொத்து விளையாட்டு, கிள்ளுப்பிராண்டி விளையாட்டு, ஆலாப்பறத்தல் விளையாட்டு முதலான விளையாட்டுக்களை பாடல்களுடன் பாடி விளையாடுவது பல இடங்களிலும் உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றைய சூழலில் இவ்விளையாட்டுக்களை விளையாடுவது குறைவடைந்துவிட்டது. ஆயினும் இவ்விளையாட்டுக்களுடன் பாடப்படும் பாடல்களை கிராமங்களில் தேடியறிய முடியும். தைப்பொங்கல் மற்றும் சித்திரை வருடப்பிறப்புக் காலங்களில் (ஏனைய காலங்களிலும் தாம் விரும்புகின்றபோது ஊஞ்சல் கட்டி ஆடுவர்) விளையாடும் ஊஞ்சல் விளையாட்டு சிறப்பு மிக்கதாகும். அமர்ந்திருப்பதற்கு ஏற்றதாக அமைந்த பலகையின் இரு மருங்குகளிலும் வலிமை மிக்க கயிற்றினைப் பிணைத்து மரத்தில் அல்லது இரண்டு நீளமான குற்றிகளை நட்டு அவற்றினை ஒரு விட்டத்தினால் இணைத்து கட்டி அவ்வூஞ்சலில் அமர்ந்திருந்து பாடல்களைப் பாடி, உந்தி உந்தி விளையாடுவதாக

ஊஞ்சல் விளையாட்டுக் காணப்படும்.பின்வரும் பாடல் எடுத்துக்காடட்டாக அமைகின்றது.

தெத்தாத ஊஞ்சல் தெத்தாத
தெத்துப்பலகாரம் சுட்டுத்தாறன்
நேரே போ ஊஞ்சல் நேரே போ
நேற்றடித்த காற்றோடு

ஊஞ்சலாடுவோர் தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையில் சிறு பாடல்களைப் பாடி வந்துள்ளதுடன் நல்லதங்காள் கதை, கண்ணகி கதை, வாளபீமன் கதை முதலான நீண்ட கதைகளையும் பாடல்களாக(கதைப்பாடலாக)ப் பாடி வந்துள்ளனர். இவ்வகையில் மனவுணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் பொழுது போக்குவதற்கும் ஊஞ்சலாடல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

மனிதர்களின் அக உணர்வுகளின் வெளிப்பாடுகளுள் காதல் முதன்மையானதாகும். மனிதன் தனது பருவ வயதை எட்டும்போது காதல் உணர்வு உடல் நிலையில் மட்டுமன்றி மனநிலையிலும் மாற்றங்களை உண்டு பண்ணுகின்றது. நாட்டார் பாடல்களில் காதல் பாடல்கள் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் வடிகால்களாக விளங்குகின்றன. காதலையும் வீரத்தையும் போற்றுவதாக அமைந்த சங்கப்பாடல்களில் காணப்பட்ட காதலர்களும் ஏற்றிப்போற்றுகின்ற பொருத்தமுடைய காதல்(அன்பின் ஐந்திணை), பொருத்தமற்ற காதல்(கைக்கிளை – பெருந்திணை) ஆகிய இருவகைத் தன்மைகளையும் நாட்டார் பாடல்களிலும் காணலாம். காதற்பாடல்கள் காதலர்களால் மட்டுமன்றி காதலர்கள் அல்லாதோரால் தொழில் புரியும்போது பாடப்படுவனவாகவும் அமைந்திருக்கும்.

காதலர்கள் ஒருவரை ஒருவர் விழித்தும் நேரடியாக விழிக்காது குறிப்பால் சுட்டியும் தம் மண உணர்வுகளை எவ்வித தயக்கங்களும் இன்றி வெளிப்படுத்தியும் பாடுவதாகப் பெரும்பாலும் அமைந்த காதற்பாடல்களில் உவமை, உருவக அணிகளும் எதுகை, மோனை கையாளுகைகளும் அழகிய வருணனைகளும் கலந்து இன்ப, துன்ப உணர்வுகளும் கேலியும் கிண்டலும் வெளிப்பட அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கும் பின்வரும் காதற்பாடலில் காதலன் காதலியை அக்கரைக்கொக்கு, அணில் கோதா மாம்பழம், வாழைப்பழம், சர்க்கரை, ஏலங்கிராம்பு, மருதங்கிளி வங்கிசம் என்று பலவாறு வர்ணிப்பதைக் காணலாம்.

அக்கரையில் கொக்கே
அணில் கோதா மாம்பழமே
இக்கரைக்கு வந்தியண்டா – ஒரு
இனித்த கனி நான் தருவேன்.

வாழைப்பழமே என்ர
வலது கையிற் சர்க்கரையே
ஏலங்கிராம்பே உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்.

மாமி மகளே என்ர
மருதங்கிளி வங்கிசமே
ஏலங்கிராம்பே உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்.

ஆசைக்கிளியே என்ர
ஆசியத்து உம்மாவே
ஓசைக்குரலாலே– உங்க
உம்மாவைக் கூப்பிடுகா.

காதலியைப் பலவாறு வருணித்த காதலன் தான் தன் காதலி மீது காதல் கொண்டமைக்கான காரணத்தை ஒழிவு மறைவு இன்றி வெளிப்படுத்தி விடுகின்றான். அப்பாடல் பின்வருமாறு:

ஒண்டுக்கு மில்லகிளி
உன்னை நான் விரும்புறது
சங்குச் சட்டைக்கும் - உன்ர
சரிஞ்ச நல்ல தேமலுக்கும்

காதலன் தன் தந்தையிடம் அழகிய பெண்ணொருத்தி காத்தான்குடியிலிருந்து தம்மூருக்கு வந்திருப்பதையும் அவளை திருமணம் செய்ய விரும்புவதையும் குறியீட்டுப் பாங்கில் சொல்லும் பின்வரும் பாடல் கவனிக்கத்தக்கதாகும்.

காத்தான்குடியிலிருந்து – ஒரு
கன்னிநாகு வந்திருக்கு
காசைத்தா வாப்பா – நம்மட
கைமுதலாய் வாங்கிடுவோம்.

இப்பாடலில் கன்னிநாகு பெண்ணாகவும் அப்பா தரும் காசு அப்பாவின் சம்மதமாகவும் கருதப்படத்தக்கதாக உள்ளது. தன்னை ஏமாற்றியமையினையும் நிறைவேறாத தன் காதலையும் காதலன் வெளிப்படுத்தும் பின்வரும் வரிகள் மிகவும் எளிமையாக உள்ளன.

ஓதிப்படிச்சி
ஊர்புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய்த தீங்கை – அல்லா
எள்ளளவும் ஏற்க மாட்டான்.

பூசின செம்பே– என்ர
புழுதிபடா வெண்கலமே
ஆசைக்கிளி விளக்கே – உன்னை
ஆருவெச்சி ஆளுவரோ?

காதலன் மட்டுமன்றி காதலியும் தன் மன உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்த பாடல்களும் சுவை மிக்கனவாக உள்ளன. காதலி காதலனை வீட்டுக்கு வருமாறு அழைக்கும் விதத்தைப் பின்வரும் பாடல் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஓடையிலே போறதண்ணி
தும்பிவிழும் தூசி விழும்
வீட்டுக்கு வாங்க மச்சான்
குளுந்ததண்ணி நான்தாறேன்.

தன் காதலன் மறைமுகமாக வந்து தன்னைப் பார்ப்பது பிரச்சினையினை உண்டுபண்ணிவிடும் என்று கருதும் காதலி காதலனுக்கு அதனை வெளிப்படுத்தி, தன்னைச் சந்திக்க எந்நேரத்தில் காதலன் வரலாமென்பதையும் புலப்படுத்துகின்ற பாடல் சிறப்பு மிக்கதாகும். அப்பாடல் வரிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

கோடியால வந்து நின்று
கொக்காட்டம் பண்ணாதீங்க
ஊடுநிறைஞ்ச சனம் - எங்க
உம்மாவும் திண்ணையிலே.

சாம மறிஞ்சி
தலைவாசலிலே வந்துநின்று
கோழிபோல் கூவுராசா – உன்ர
குரல்மதித்துக் கூப்பிடுவேன்.

பெண்கள் தம்முடலழகைக் கண்டு தம்மில் விருப்பங்கொண்டு அலைகின்ற பிற ஆண்களுக்கெதிராக தம் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தவும் தயங்கவில்லை. பின்வரும் பாடலில் பலரும் நடந்து செல்லுகின்ற நடைவரம்போ(நடை பாதையோ) தன் உடல் என்று பெண் ஒருத்தி கேள்வி கேட்பதைக் காணலாம்.

போட்டா வரம்பால
புறா நடந்து போறதுபோல்
நாட்டாருக்கெல்லாம் - ஒரு
நடைவரம்போ என் சரீரம்.

பொருந்தாக்காதலை பெண்கள் எதிரப்பதனையும் மட்டக்களப்பு மாவட்ட நாட்டார் பாடல்களில் காணலாம். வறுமை காரணமாக பெற்றார் தம் பெண் பிள்ளைகளை செல்வமும் செல்வாக்கும் மிக்க வயதானவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் துன்பநிலை சமூகத்தில் காணப்பட்ட நிலையில் அவ்வாறு வயதான ஆண்களுக்கு வாழ்க்கைப் பட்ட பெண்கள் தமது ஆற்றாமையை வெளிப்படுத்தும் பாடல்கள் பாதிக்கப்பட்ட பெண்களின் எதிர்புணர்வினையே பிரதிபலித்து நிற்கின்றன.

வாண்டதெல்லாம் இந்த
வயிற்றுக்கொடுமையினால்
இருமல் தலைவலியாம் - கிழவனிடம்
என்ன சுகம் எந்தனுக்கு.

பொருந்தாத் திருமணத்தை எதிர்ப்பதாக, பெண்களின் குரலாக வெளிப்படும் பின்வரும் பாடல்கள் அமைந்துள்ளன.

சுட்டகட்டைபோல நீ
சுடுகாட்டுப்பேய்போல
அட்டை முகறா நீ
அடுப்படிக்கு மாகுமாடா.

எச்சிமுள்ளு சொத்தைக்காரா
இருபுறமும் நாய்முகறா
மங்குறட்டிச் சூத்துக்காரா – நீ

மாப்பிள்ளைக்கு மாகுமாடா

இப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள உவமைகள் மிகச் சாதாரணமாகவும் அதேவேளை கூற வந்த கருத்தை மிகத் தெளிவாகப் புலப்படுத்துவனவாகவும் உள்ளன.

தொழில் செய்யும் வேளையில் பாடப்படும் பாடல்கள் தொழிற்பாடல்கள் ஆகும். தொழிலின் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்க தொழிற்பாடல்கள் பாடப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி ஆகிய இரண்டு தொழில்களும் பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றன.இவ்விரண்டு தொழில்களுடனும் தொடர்புடைய பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. விவசாயப்பாடல்கள் விவசாயச் செய்கையின் போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் ஏற்ப அமைந்துள்ளன. உழவுப்பாடல்கள்(ஏர்ப்பாடல்கள்), நாற்று நடும் பாடல்கள், ஏற்றப்பாடல்கள்(நீர் இறைக்கும்போது பாடப்படும் பாடல்கள்), களையெடுக்கும் பாடல்கள், அருவி வெட்டும் பாடல்கள், சூடடிக்கும் பாடல்கள், பொலிப்பாடல்கள் என விவசாயப்பாடல்கள் பல வகைப்பட்டனவாக உள்ளன. கலப்பையில் எருதுகள் பூட்டப்பட்டு உழும்போது உழவர்கள் எருதுகளை தம்மை ஒத்த மனிதர்களாகக் கருதி செயற்பட்டுள்ளனர். இதனை அவர்கள் பாடிய ஏர்ப்பாடல்கள் மூலம் கண்டுகொள்ளலாம். பின்வரும் பாடலில் எருதினை உழவன் செல்லன் என்று குறிப்பிட்டு பாடியுள்ள விதம் சிறப்பாக உள்ளது.

ஓரம்போ……….. சார்பார்  
ஏ எ எ ………….ஹே எ எ

பாரக்கலப்பையடா செல்லனுக்கு  
பாரமெத்தத் தோணுதடா.

வரம்போ தலைகாணி – செல்லனுக்கு  
வாய்க்காலோ பஞ்சு மெத்த

இந்த நடை நடந்து – செல்லா நாம்  
எப்போகரை சேர்வமடா.

முன்னம்கால் வெள்ளையல்லோ – செல்லனுக்கு  
முகம் நிறைந்த சீதேவி.

எட்டுக்காலோடே – செல்லா நமக்கு  
இருகால் தலைமூன்று

காய்த்து முற்றிக் குலுங்கும் நெற்கதிர்களை அரிவாளினால் அறுத்து(அருவி வெட்டி) பின்னர் அவற்றை(உப்பட்டியினை) காயவைத்து, கட்டாகக்கட்டி(உப்பட்டிக்கட்டி), அதனைத் தூக்கிச் சென்று ஓரிடத்தில் மழையினால் நெல் பாதிப்படையாவண்ணம் குவித்து(சூடு வைத்து) பின்னர் அச் சூட்டினை மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்து(சூடடித்து) வைக்கோல் துகள்களுடன் கூடிய நெல்மணிகளை(பொலியை) காற்றில் தூற்றுவர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் உழவர்கள் பல பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்களில் அவர்கள் இறைவன் மேற்கொண்ட நம்பிக்கையினையும் அதன் காரணமாக தமது வேண்டுதல்களை, பிரார்த்தனைகளை முன்வைக்கின்றமையினையும் காணலாம்.

பொலிபொலிதாயே பொலிதம்பிரானே பொலி
பூமிபொலி பூமாதேவித்தாயே
மண்ணின்களமே மாதாவேநிறைகளமே
பொன்னின்களமே பூமாதேவி அம்மா பொலி பொலி பொலியே

நாளதுகேட்டு நார்க்கம்பு வெட்டி
நல்லகடாக்கள் தெரிந்துபிணைத்து
ஏரதுபூட்டி இடம்பட உழுது
எல்லையில்லாத செந்நெல்விதைத்துச்
சோழன் எருதுகள் தொண்ணூறாயிரம்
பாண்டியன் எருதுகள் பன்னீராயிரம்
இரவும்பகலும் ஏற்றி இழுக்கப்
பொலிவளராய் பொலிபொலியோ.

கணபதியே கரிமுகனே பொலிபொலி
கந்தருக்குமூத்தோனே பொலிபொலிபொலியோ.

மட்டக்களப்பு கரையோரப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்களில் ஒரு பகுதியானோர் தமது பாரம்பரியத் தொழிலாக மீன்பிடித்தலை மேற்கொண்டு வருகின்றனர். கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்போது, மீன் பிடிக்கும்போது, ஓய்வாக இருக்கும்போது என பல சந்தர்ப்பங்களில் இத்தகைய பாடல்கள் பாடப்படுகின்றன. இவற்றை அம்பாப்பாடல்கள் என்றும் குறிப்பிடுவர்.பின்வரும் பாடல் களுவன்கேணிப் பகுதியில் தோணி தள்ளும்போது பாடப்படுகின்றது.

ஏலேலோ ……. ஆல
ஏலேலோ….. ஆல
ஏலேலோ…… ஆல
எல்லல்ளை . …ஆல
அல்லாட…….ஆல
ராணி மருவாழ் ஆல
தாய் பெருமாள் …. ஆல
அன்னதாளோ…. ஆல
அத்து புள்ள…. ஆல

பின்வரும்பாடல் கரைவலை இழுக்கும்போது இசையுடன் இருவர் மாறி மாறிப்பாடுவதையும் ஏனையோர் ஆரம்ப அடியை பாடுவதையும் காணலாம்.

ஓலேலோ…… ஓலேலம்மா…
ஒய்யாத நடைப்பொன்னம்மா….
முறட்டுப்புள்ள சிரிப்பென்னகா….
வாளால உள்ள வெட்டும்
வானவர்கள் கையைத்தட்ட
ஆன கடியப்போல…..
அஞ்சாறு தட்டுறுட்டி
ஓவெல்…..ஓவெல்….
ஓலேல…. ஓலேலம்மா

மக்களின் வாழ்க்கை முறைகளுடன் நம்பிக்கைகளும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. இயற்கையை நம்பி, இயற்கையோடு பொருந்தி தம்வாழ்வை அமைத்துக்கொண்டு வாழ்ந்த மனிதர்கள் அவ்வியற்கையினையே கடவுளாகவும் கண்டனர். இயந்திரங்களைக் கண்டிராத காலத்தில் எல்லாம் இறைவனாலேயே நடப்பதாகக் கருதிச் செயற்பட்டனர். தாம் மேற்கொள்ளும் அனைத்துவிதமான செயற்பாடுகளிலும் கடவுள் நம்பிக்கையை வெளிப்படுத்தினர். கடவுளை முன்னிறுத்தி தம் வேண்டுதல்களை முன்வைத்தே வேலைகளைச் செய்தனர். இத்தகைய செயற்பாடுகளின்போது வெளிப்பட்ட பாடல்கள் சமயநிலைப்பட்ட, பிரார்த்தனைப் பாடல்களாக – வேண்டுதல் பாடல்களாக வெளிப்பட்டு நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.தொழிற்பாடல்களில் அதிகமானவை சமய நிலைப்பட்ட தெய்வ நம்பிக்கையை வெளிப்படுத்தும் பாடல்களாகவே உள்ளன. கிராமிய சடங்கு வழிபாட்டு முறைகள் இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளன. மட்டக்களப்பில் வழங்கும் பின்வரும் பாடலில் ஒரு பெண் தனக்கேற்ற மணவாளன் கிடைக்க ஒரு பாக்கியம் தா ஆண்டவனே என்று வேண்டுவதாக அமைந்துள்ளது.

மாலை விளக்கெரிய
மணவாளன் சோறுதின்னப்
பாலன் விளையாட – ஒரு
பாக்கியம்தா ஆண்டவனே

இன்னுமொரு பெண் மண்டூர்க்கந்தனை முன்னிறுத்தி தன் மனக்கவலையைத் தீர்த்தால்தான் சாமி என்று கெயெடுத்துக் கும்பிடுவேன் என்று வேண்டுகிறாள். அப்பாடல் வருமாறு:

மண்டூர்க்கந்தா – என்ர
மனக்கவலை தீர்ப்பையெண்டால்
சாகுமளவு முன்னைச்
சாமிஎன்று கையெடுப்பேன்.

தன் மச்சானுக்கு காய்ச்சல் தீரவேண்டுமென்று நேர்த்தி வைக்கிறாள் பிறிதொரு பெண்.

கண்ணான மச்சானுக்குக்
காச்சல்விட்டுப் போகுமெண்டால்
பொன்னாலே நூலிழுத்துப்
போய்வருவேன் சன்னிதிக்கு.

களவெடுத்த கள்ளனுக்கு புடையன் பாம்பு கடிக்கவேண்டுமென்று அல்லாஹ்விடம் வேண்டுகிறாள் ஒரு இஸ்லாமியப் பெண்.

காட்டுப்பள்ளி அவுலியாவே
கருணையுள்ள சீமானே
பூட்டுடைச்ச மீரானுக்கு – ஒரு
புடையன் கொத்த உதவி செய்யும்.

இத்தகைய பாடல்களுடன் சடங்கு வழிபாட்டுடன் தொடர்புடையனவாகவும் பாடிய ஆசிரியர் யாரென்று அறியப்படாத நிலையிலும் நீண்டகாலமாகப் பாடப்பட்டுவருகின்ற வழிபாட்டுப்பாடல்களும் இவ்வகையினுள் அடங்கும்.

மட்டக்களப்பில் காணப்படும் கொம்புமுறிப்பாடல்களும் வழிபாட்டுப்பாடல்களாகவே நோக்கப்படவேண்டியவையாகும். இப்பாடல்கள் மக்களின் நம்பிக்கை, வழிபாடு

என்பவற்றின் பிரதிபலிப்பாக விளங்குகின்றன. விரிவஞ்சி விரிவாக எடுத்துக் கூறவில்லை. பின்வரும் பாடல் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

வடசெரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
செம்பரப்பற்றைக்கு உள்ளே உள்ளே

தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே
சித்திரத்தேருக்கு மேலே மேலே
வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
வண்ணாண்ட சாடிக்கு உள்ளே உள்ளே

இறந்தவர்களை நினைத்து, அவர்களின் இழப்பை எண்ணி பாடப்படும் பாடல்களே ஒப்பாரிப்பாடல்களாகும். ஒப்பாரி பாடுவோர்(வைப்போர்) இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டு, தொடர்பு படுத்தி, இறந்தவர்களின் சிறப்புக்களை சொல்லிப் பாடுவர். வாழ்வின் முன்னுரை தாலாட்டு என்றும் வாழ்வின் முடிவுரை ஒப்பாரி என்றும் கூறுவர்(சக்திவேல்,சு.) தாலாட்டு ஒப்பாரி ஆகிய இரண்டும் பெண்களால் பாடப்படுவனவாகும். பெண்கள் தம் கணவனுக்காகவும், பெற்றோருக்காகவும், சகோதரங்களுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் மாமன் மாமிக்காகவும் பாட்டி பாட்டன்மாருக்காகவும் உறவுகளுக்காகவும் ஒப்பாரி பாடுவதைக்காணலாம். இறந்தவரின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக உறவுக்காரக்கள், ஊரவர்கள் வருகை தருவார்கள். இறந்தவரின் பிணத்தைச் சுற்றி குழுமியிருக்கும் பெண்கள் ஒப்பாரி பாடுவர். அங்கு வருகின்றவர்களுக்கும் இறந்தவருக்கும் இடையிலான உறவு முறை, பழக்கங்கள் என்பவற்றைச் சொல்லி எழுந்து கட்டிப்பிடித்து அழுவர். வந்தவர்களும் ஒப்புக்காக ஒப்பாரி வைத்து அழுவர். இச் செயற்பாடு துயரத்தை மேலும் அதிகரிப்பதாக அமையும். சில பெண்கள் தம் சேலை முந்தானையை முகத்தில் போட்டுக்கொண்டு அழுவர். இறந்தவரை நினைத்து இருந்தவர்களும் வந்தவர்களுமாக ஒப்பாரி வைத்து அழுத பின்னர் வந்தவர்கள் இறப்பு எவ்வாறு நேர்ந்தது என்ற செய்தியை கேட்றிந்துகொள்வர்.

ஏனைய பிரதேசங்களைப் போன்றே மட்டக்களப்பிலும் இன்று ஒப்பாரி பாடுவது அருகிவருகின்றது. கிராமப் பகுதிகளில்

என்ர அழகு ராசாவே ராசாவே
என்ன விட்டுத்து போனியளே ராசாவே ராசாவே
பாவி மனம் துடிக்குதடா ராசாவே ராசாவே
என்ன விட்டுத்து போனியளே ராசாவே ராசாவே
கண்ணில்லாத காலன் அவன் ராசாவே ராசாவே
கிளிக்கூட்டையே பிரிச்சு விட்டானே ராசாவே ராசாவே

நாட்டார் பாடல்கள் மக்களின் வாழ்வோடு ஒன்றியவையாகவும் மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து உருவாகியவையாகவும் காணப்படுகின்றன. இதன்காரணமாக அவை மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மன உணர்வுகளைப் பிரதிபலித்து நிற்கின்றன. மட்டக்களப்பு மாவட்ட நாட்டார் பாடல்களிலும் இத்தன்மைகளைக் காணமுடிகின்றது. அத்துடன் இப்பாடல்களில் மட்டக்களப்பு மக்களின் பேச்சு வழக்குச் சொற்கள், மட்டக்களப்பிலுள்ள ஊர்களின் பெயர்கள்,இனக் குழுமங்கள் பற்றிய செய்திகள் முதலானவற்றையும் அறியமுடியும்.

மட்டக்களப்பு மக்கள் தம் பேச்சு வழக்கில் சொல்லின் இறுதியில் ‘கா’ வை பயன்படுத்தும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இத்தன்மையை மட்டக்களப்பில் வழங்கும் நாட்டார் பாடல்களிலும் காணலாம். பண்ணாதகா, நித்திரையில் தோணுதுகா, கனவிலும் வாட்டுதுகா, அழுததுகா, கொத்தமல்லி வாடுதுகா, சீமையிலே பஞ்சமோகா, மீசை ரண்டும் கண்ணுக்குள் நிற்குதுகா, சிறகடித்துக் கூவுதுகா, பறந்து போச்சுதுகா முதலான பல சொற்களை எடுத்துக் காட்டலாம். பொடிச்சி,பொட்ட,பொடியன், புள்ள, மச்சி, குமரு, என்று பயன்படுத்தப்படுகின்ற வழக்கம் கிராமப்புறங்களில் பரவலாகக் காணப்படுகின்றது பின்வரும் பாடல்களில் அச்சொற்கள் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

உனக்கும் கூவவில்லை – உன்ர
கள்ளனுக்கும் கூவவில்லை
குமருப் பெண்களுக்குக்
குடமெடுக்கக் கூவுறண்டி

காசி தரட்டோமச்சி
கதைத்திருக்க நான்வரட்டோ
வெள்ளைப் பொடிச்சி
வெள்ளிநகை பூண்டபுள்ள

இடுப்புச் சிறுத்தபொட்ட
இருதுடையும் நொந்த பொட்ட
கொக்கிச்சான் பொட்ட – உனக்கு
கோபமென்ன என்னோட

பொடியன் பொடியனென்று
புறகுதலைபேசாதே

இவ்வாறே மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் ஒண்ணா, ஒண்டுக்குமில்ல, வட்டை, காட்டுப்பள்ளி முதலான பல பேச்சு மொழிச் சொற்களை உள்வாங்கி மட்டக்களப்பின் தனித்துவத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் ஆகிய இரு பிரதான இனங்குழுமங்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மாவட்டத்தில் வழங்கும் நாட்டார் பாடல்கள் இவ்விரு இனக்குழுமங்களையும் அடையாளப்படுத்தி நிற்பதை அவதானிக்கலாம். பின்வரும் பாடல் முஸ்லிம் சமூகத்தினர் பயன்படுத்தும் வாப்பா, உம்மா, காக்கா ஆகிய உறவுமுறைச் சொற்களை அடையாளப்படுத்தி நிற்கின்றது.

வாப்பாருக்கார் பன் அறுக்க
உம்மாருக்கா பாய்இழைக்க
காக்காருக்கார் விற்றுவர - இந்தக்
கரவாகான் வேணாங்கா

மட்டக்களப்பின் ஊர்ப்பெயர்களை அடையாளப்படுத்தியனவாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்குகின்ற நாட்டார் பாடல்கள் உள்ளன. காத்தான்குடி, ஏறாவூர், களுதாவளை, பட்டிப்பளை முதலான பல பெயர்கள் இவ்வாறு இடம்பெற்றுள்ள. பின்வரும் பாடல்கள் எடுத்துக்காட்டுக்களாகும்.

காத்தான்குடிக்குக்
கரத்தைகொண்டு போறமச்சான்
சீத்தை இரண்டுமுழம் - அந்தச்
சீமையிலே பஞ்சமோகா

ஏறா வூரானென்று
ஏளனமாய்ப் பேசாதடா

பட்டிப்பளைக் குட்டி
பார்க்க நீயும் கெட்டி

மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை வைத்து நோக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பின் தனித்துவத்தினை அடையாளப்படுத்தத்தக்கதாக இப்பாடல்கள் விளங்குகின்றன. உலக நாடுகளில் நாட்டார் இலக்கியங்களைச் சேகரிக்கும் பணியும் அவற்றை ஆய்வு செய்யும் முயற்சிகளும் தொடங்கி இருநூறு ஆண்டுகளைக் கடந்திருக்கின்றபோதிலும் ஈழத்தைப் பொறுத்தவரை நாட்டாரிலக்கியப் புலம் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. மட்டக்களப்பு மாவட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல.

> ‘‘ஈழநாட்டிலே கிராமியக் கவிதை நலம் நிறைந்துள்ள பகுதி மட்டக்களப்பு. தேனுக்கும் பாலுக்கும் தமிழர் வீரத்திற்கும் பெயர்பெற்ற மட்டக்களப்பு மக்கள் கலைகளைப்பேணி வளர்ப்பதிலும் தலைசிறந்து விளங்குகின்றது. உணர்ச்சிக்கவிதை நிறைந்த மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் பல்வேறு துறைப் பட்டு, நிறைந்து வழங்குகின்றன’’

என்று சு.வித்தியானந்தன் கூறுவதற்கு அமைய நாட்டார் பாடல்கள் எங்கும் காணப்படுகின்றன. அவற்றைத் தேடி ஆவணப்படுத்துவதுடன் அவை பற்றிய ஆய்வுகளையும் மேற்கொள்ளவேண்டியது அவசியமானதாகும்.

**உசாத்துணைகள்**

வித்தியானந்தன்,சு, (1962), மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள், இலங்கைக்கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு வெளியீடு.

அம்மன்கிளி முருகதாஸ்(தொகுப்பாசிரியர்), (2007), இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம், குமரன் புத்தக இல்லம்.

மேகராசா,த,(தொகுப்பாசிரியர்), (2012), ஆய்வரங்கக் கட்டுரைகள், பட்டிப்பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்.